நோயாளி தகவல் கையேடு

# புரோமோகிரிப்டீன்

## (BROMOCRIPTINE)

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T86R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# புரோமோகிரிப்டீன் (Bromocriptine) பின்வரும் மருத்துவப் பிரச்சினைகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது:

- ஆண் பெண் மலட்டுத்தன்மை, ஆண் ஹார்மோன் பிரச்சினைகள், மாதவிடாய்ப் பிரச்சினைகள், தீங்கற்ற மார்பக நோய், ப்ரோலாக்டின் (prolactin) ஹார்மோன் அளவுக்கு அதிகமாகச் சுரப்பதால் மார்பகத்தில் வழக்கத்திற்கு மாறாகப் பால் வடிதல்.
- பிரசவத்திற்குப் பிறகு தாய்ப்பால் குறைவாகச் சுரத்தல்
- பார்கின்சன் நோய்
- மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி (Acromegaly) (வளர்ச்சி ஹார்மோன் அளவுக்கு அதிகமாகச் சுரத்தல்)
- அடிமூளைச் சுரப்பியில் (pituitary gland) புற்றுநோய்க் கட்டிகள்

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

வயிற்றுக்கு பாதிப்புகள் ஏற்பட்டால், மருந்தை உணவுடன் அல்லது பாலுடன் உட்கொள்ளலாம். குமட்டல் இருந்தால், இரவில் உறங்கச்செல்லும்போது எடுப்பது அதைக் குறைக்கும்.

மருந்திலிருந்து முழுப் பலன் பெறுவதற்கு இம்மருந்தை சில நோயாளிகள் வாரக் கணக்கில் எடுக்க வேண்டியிருக்கலாம். மருந்து வேலை செய்யவில்லை என்று நீங்கள் நினைத்தாலும்கூட, மருந்து உட்கொள்வதை நிறுத்தாதீர்கள்.

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், அடுத்த 4 மணி நேரத்திற்குள் உட்கொள்ளலாம். 4 மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை அதற்குரிய நேரத்தில் எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

**இரைப்பைசிறுகுடல் :** குமட்டல், மலச்சிக்கல், பசியின்மை, வாய் உலர்தல்.

**இருதயஇரத்தக்குழாய் :** இரத்த அழுத்தம் குறைதல் (இதனால் உட்காரந்துவிட்டு, படுத்துவிட்டு அல்லது குந்திவிட்டு எழும்போது கிறுகிறுப்பு, தலைச்சுற்றல் அல்லது மயக்கம் ஏற்படுதல்), குளிராக இருக்கும்போது கை,கால் விரல்களில் மரத்தலும் வலியும் மோசமாதல்.

**மத்திய நரம்பு மண்டலம்:** மனச்சோர்வு, குழப்பம், மனப்பிரமை.

**நரம்பு, தசை மற்றும் எலும்பு:** கால் தசைப் பிடிப்புகள், கட்டுப்படாத உடல் அசைவுகள் ( முகம், நாக்கு, கைகள், தலை மற்றும் உடலின் மேல் பாகம்).

**சுவாசம்:** மூக்கு அடைத்துக் கொள்ளுதல்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

சில பக்க-விளைவுகள், பார்கின்சன் நோய், மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, அல்லது அடிமூளைச் சுரப்பியின் புற்றுநோய்க் கட்டிகளுக்கு புரோமோகிரிப்டீனை அதிக அளவில் பயன்படுத்தும்போது ஏற்படலாம்.

சில பக்க-விளைவுகள் மருந்தைத் தொடர்ந்து உண்டு வரும் சில நாட்களில் தானாகவே நீங்கிவிடும்.

தேவையற்ற மற்ற பக்க-விளைவுகள் இருந்தால் மருத்துவரைப் பாருங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

புரோமோகிரிப்டீன் மந்தம் மற்றும் தலைச்சுற்றலை ஏற்படுத்தக்கூடியது. இவை இருந்தால், வாகனம் ஓட்டாதீர்கள் அல்லது இயந்தரங்களை இயக்காதீர்கள். மருந்தை உட்கொள்ளத் தொடங்கும் ஆரம்பத்தில் தலைச்சுற்றல் இருக்கலாம். மருந்தை இரவில் உறங்கச்செல்லும்போது எடுத்தால் தலைச்சுற்றல் குறையும். உட்கார்ந்துவிட்டு, படுத்துவிட்டு அல்லது குந்திவிட்டு எழும்போது தலைச்சுற்றல் ஏற்பட்டால், மெதுவாக எழுந்திருப்பது நல்லது.

புரோமோகிரிப்டீன் எடுக்கும்போது மது அருந்தக் கூடாது. பார்வை மங்குதல், நெஞ்சு வலி, குழப்பம் மற்றும் இருதயம் வேகமாக அடித்துக் கொள்ளுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

புரோமோகிரிப்டீனை மற்ற மருந்துகளுடன் உட்கொள்ளும்போது எதிர் விளைவுகள் ஏற்படலாம். எனவே, அவ்வாறு செய்வதற்கு முன்னால் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

மருந்தை திடீரென்று நிறுத்தாதீர்கள். வேண்டாத விளைவுகள் ஏற்படலாம்.

**கர்ப்பம்:** ஹார்மோன்-சார்ந்த கருத்தடை முறைகள் புரோமோகிரிப்டீனின் செயல்திறனைக் குறைத்துவிடும். எனவே, கர்ப்பம் தரிக்க விரும்பாத பெண்கள் ஹார்மோன்-சாராத வேறு கருத்தடை முறைகளைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் கர்ப்பமாக இருந்தால், அதை உடனே மருத்துவரிடம் தெரிவியுங்கள். கர்ப்பக் காலத்தில் புரோமோகிரிப்டீனைத் தொடர்ந்து எடுக்க முடியுமா என்று ஆலோசனை கேளுங்கள்.

**தாய்ப்பால் கொடுத்தல்:** புரோமோகிரிப்டீன் தாய்ப்பால் சுரப்பதை நிறுத்திவிடும். அப்படியே தாய்ப்பால் சுரந்தாலும், அதைப் பிள்ளைக்கு ஊட்டாதீர்கள்.

## மருந்தை நான் **எப்படிப் பாதுகாக்க வேண்டும்** ?

மருந்தை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.